இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

பட்டமேற் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2018/2019

**ESP 2202 / STP8502**

கல்வியின் தத்துவம் மற்றும் சமூக அடிப்படைகள்

பகுதி 1 இன் சகல வினாக்களுக்கும் பகுதி 2 இல் இருந்து எவையேனும் மூன்று வினாக்களுக்கும் விடை எழுதுக

காலம் : 03 மணித்தியாலங்கள்

திகதி : 19.01.2020 நேரம்: மு.ப 9.30 - பி.ப 12.30

## பகுதி 1

01. யுனெஸ்கோ தாபனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட கல்வியின் பிரதான தூண்களைக் குறிப்பிடுக.

02. "கல்வி என்பதானது தனியாட்களில் விரும்பத்தகு மனதை விருத்தி செய்யும் ஒரு கருவியாகும்." (ஆர்.எஸ். பீட்டர்ஸ்) இக்கூற்றின் அடிப்படையில் கல்வியின் வகிபங்குகள் மூன்றை(03) சுருக்கமாக விபரிக்குக.

03. சமூகவியலாளர்கள், சமூக அடுக்கமைப்பு தொடர்பாக நான்கு அடிப்படைத் தொகுதிகளை இனங்கண்டுள்ளனர். அவற்றை பட்டியலிடுக.

04. தத்துவம் தொடர்பான பிரதான கோட்பாடுகள் நான்கினை சுருக்கமாக விளக்குக.

05. கல்வி ஒரு முதலீடாகக் கருதப்படுகின்ற போது, வளங்களின் வினைதிறனற்ற பயன்பாடு மற்றும் விரயமாக்குதல் என்பன தவிர்க்கப்படல் வேண்டும். எமது நாட்டில் காணப்படும் வளங்களின் வினைதிறனற்ற வளப்பயன்பாடு மற்றும் விரயமாக்குதல் பற்றி சுருக்கமாக விளக்குக.

06. Mardock (1949) குடும்பமானது நான்கு அடிப்படை தொழிற்பாடுகளை ஆற்றுவதாக கூறுகிறார்.கல்வி தொடர்பாக குடும்பம் கொண்டுள்ள தொழிற்பாடுகளை சுருக்கமாக விளக்குக.

07. சகலருக்கும் கல்வியை வழங்குவது நவீன சமூகங்களின் பொறுப்பாக உள்ளது. சகலருக்கும் கல்வியை வழங்குவதில் இலங்கை எதிர்கொண்ட சவால்கள் ஐந்தினைப் (5) பட்டியலிடுக.

08. கல்வியினூடாக தத்துவார்த்த ஞானத்தை உருவாக்குவதை பிளேட்டோ நோக்காக கொண்டிருந்தார். அவரது கல்வித் தத்துவத்தில் காணப்படக்கூடிய பிரதான நோக்கங்களை சுருக்கமாக விளக்குக.

(8 X 5 புள்ளி = 40 புள்ளிகள்)

## பகுதி II

09. ஏற்கனவே இருப்பிலுள்ள உலகில் அல்லது உலகின் ஏனைய பகுதியில் முன்னர் உறுப்பினர்களாக அல்லாதவர்கள், உறுப்பினர்களாக நுழைவதற்கு ஏற்ற தகுதியை வழங்கும் ஒரு செயற்பாடு சமூகமயமாக்கல் ஆகும். (Wentworth 1980).

I. (அ) நியமங்கள் என்பதால் நீர் யாது கருதுகிறீர்? (03 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் தற்போதைய இளைஞர்களை பாதிக்கக்கூடிய புதிய கலாசார நியமங்கள் மூன்றை எழுதுக. (03 புள்ளிகள்)

II. சமூகமயமாக்கலில் இரண்டு வகைகள் உள்ளன. முதனிலை சமூகமயமாக்கல், துணைநிலை சமூகமயமாக்கல் என்பனவே அவையாகும். மேற்கண்ட இருவகை சமூகமயமாக்கல்களை பொருத்தமான உதாரணங்கள் தந்து விளக்குக. (07 புள்ளிகள்)

III. பாடசாலை ஒரு சமூகமயமாக்கல் முகவர் வகையில் அதன் வகிபங்குகளை விமர்சன ரீதியாக ஆராய்க. (07 புள்ளிகள்)

10. "அபிவிருத்தியானது யாதாயினும் ஒன்றை உயர்வான தராதரங்களிற்கு கொண்டு செல்லும் செயன்முறை என வரைவிலக்கணம் செய்யலாம்."

I. கல்வியும் அபிவிருத்தியும் ஒன்றையொன்று சார்ந்தவை. இவ்விரு எண்ணக்கருக்களும் பொதுவான குறிக்கோள்களை கொண்டனவாகும். இக்கூற்றினை சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

II. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் தொடர்பில் கல்வியின் பொறுப்புக்களை பரிசீலனை செய்க. (07 புள்ளிகள்)

III. இலங்கை சூழமைவில் கல்வியின் பொறுப்புக்களை ஆற்றுவதற்குரிய நான்கு உத்திகளையாவது குறிப்பிடுக (08 புள்ளிகள்)

11.

I. பகுப்பாய்வு கல்வித்தத்துவ எண்ணக்கரு என்றால் என்ன? விளக்குக. (04 புள்ளிகள்)

II. ஆசிரியரொருவர் கல்வித்துவ அறிவினைக் கொண்டிருத்தல் வேண்டும். ஏன் ஆசிரியர் கல்வித்தத்துவ அறிவினைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதை விளக்குக. உமது விடையினை நியாயிப்பதற்கு நான்கு காரணங்களையாவது தருக. (08 புள்ளிகள்)

III. ரூசோ பிரேரித்த கல்வி கட்டங்களை இலங்கைச் சூழலமைவில் எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என விவரிக்குக. (08 புள்ளிகள்)

12. " அனுபவமிக்கதொரு ஆசிரியர் என்ற வகையில் கல்விசார் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் பற்றி போதுமான அறிவினை கொண்டிருத்தல் வேண்டும்."

I. "கல்விசார் நோக்கங்களுக்கும் " "கல்விக் குறிக்கோள்களுக்கும்" இடையிலான வேறுபாடுகளை விளக்குக.

(04 புள்ளிகள்)

II. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் கல்வியில் அறிமுகம் செய்யப்பட்ட மைய தேர்ச்சிகளைப் பெயரிடுக. இலங்கைச் சூழலமைவிற்கு அவை எவ்வாறு பொருத்தமுடையன என்பது பற்றி விளக்குக.

(08 புள்ளிகள்)

III. வேலையுலகிற்கு தேவையான பயிற்றப்பட்ட ஊழியப்படையினை வழங்குவதும் கல்வியின் பிரதான குறிக்கோள்களில் ஒன்றாகும். இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? உமது விடைக்கான காரணங்கள் நான்கு (04) தருக.

(8 புள்ளிகள்)

13. கல்வி என்பது சமூக வாழ்விற்கு தயாராகும் நபர்களுக்காக மூத்தவர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு செயன்முறையாகும். (Emil Durkhiem)

I. முறைசார் கல்வி எனும் எண்ணக்கருவினை சுருக்கமாக விளக்குக.

(4 புள்ளிகள்)

II. முறைசார் கல்வியின் பலங்கள் மூன்றையும் பலவீனங்கள் மூன்றையும் விளக்குக.

(06 புள்ளிகள்)

III. (அ) வளர்ந்தோர் கல்வியின் முக்கியத்துவத்தினை விளக்குக.

(04 புள்ளிகள்)

(ஆ) வளர்ந்தோர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது இலங்கை எதிர்கொள்ளளும் தடைகள் மூன்றைக் குறிப்பிட்டு அவற்றை நீக்குவதற்கு பொருத்தமான யோசனைகளையும் தருக.

(06 புள்ளிகள்)

14. கல்வியானது வகுப்புக் கட்டமைப்பினை திறந்து விடுவதுடன் அதனை அந்தஸ்துக்களின் ஊடாக மேலும் சுழற்சியுடையதாக்கி முன்னோக்கிச் செல்ல அனுமதிக்கிறது. ( Jumin & Feldman)

I. சமூகப் பெயர்ச்சி என்ற எண்ணக்கருவினை சுருக்கமாக விளக்குக.

(04 புள்ளிகள்)

II. இலங்கையின் தாழ் சமூக வகுப்பு மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஐந்தினைக் குறிப்பிடுக.

(08 புள்ளிகள்)

III. சமூக பெயர்ச்சிக்கான கருவியாக கல்வி விளங்குகிறது. இக்கூற்றை நீர் ஏற்கிறீரா? உமது விடைக்கு ஆதாரமாக நான்கு காரணங்களை தருக.

(08 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது